1992 ஏப்ரல் 2]

(ஆ) ஆம் எனில், தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் இவ்விதி அமல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சர்க்கரை ஆலையிலும், கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு மாத ஊதியம், ஓய்வு பெறும் வயது இவற்றில் பெரும் வித்தியாசம் உள்ளது. இதனை அரசு அறியுமா? ஒரேமாதிரியான பணி விதிமுறைகளை ஏற்படுத்த அடுத்த ஆண்டிலாவது அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1946ஆம் ஆண்டு தொழில் வேலைகள் நிலை ஆணைகள் சட்டம் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுடைய பணி நிலைகள் நிலையாணைகள் வடிவில் வரையறை செய்யுமாறு நிறுவன உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்ள வகை செய்கிறது. மைய அரசு கொண்டு வந்த இந்த தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் மைய மற்றும் மாநில விதிகள் அமைக்கப்பட்டு உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 450, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

450—

வழக்கறிஞர்களுக்கு வீட்டுவசதி வாரியம் மூலம் வீட்டுமனை.

*5909 திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகம் முழுவதும் உள்ள வழக்கறிஞர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் வீட்டுமனை அல்லது கட்டிய வீடுகளை ஒதுக்கித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் இன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே வீடில்லாமல் இருக்கிறார்கள். அப்படியிருக்க குடும்பத்திற்கு ஒரு வீடு என்று நீங்கள் பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறீர்கள். வழக்கறிஞர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களை நீங்கள் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு எப்படியாவது நிலத்தைக் கையகப்படுத்தி வீடில்லாத வழக்கறிஞர்களுக்கு வீட்டுமனையோ அல்லது வீடுகளைக் கட்டித் தரவோ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்கறிஞர்கள் எந்த ஒரு பாவமும் செய்யாத காரணத்தினால்தான் வழக்கறிஞர்களுடைய முன்னேற்றத்தின் மீது என்றென்றும் அக்கறை கொண்டிருக்கிற போற்றுதலுக்குரிய தமிழக முதல்வருடைய அரசு அட்வகேட் வெல்ஃபேர் ஃபண்ட்டிலே எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்குச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். வழக்கறிஞர் ஒருவர் இறந்துவிட்டால் 60 000 ரூபாய் தருகின்ற திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். வீட்டு வசதி ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பிரிவினருக்கும் எத்தனை விழுக்காடுகள் என்று அரசினால் நிர்ணயிக்கப்பட்டு ஏற்கனவே நடைமுறையில் இருந்து கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் வழக்கறிஞர்களுக்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தை ஒதுக்கீடு செய்வது என்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்ற காரணத்தினால் இதை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரும் ஒரு வழக்கறிஞர்தான். இன்று, வழக்கறிஞர்கள் இறந்த பின்னால், கொடுக்கக்கூடிய வழக்கறிஞர்களின் நிதியுதவிக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அவர்கள் உயிரோடு இருக்கிறபோது, அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்று சொல்லி, வருகிற நிதியாண்டில், எப்படியாவது 'அட்வகேட் காலனி' என்பதை மாவட்டத் தலைநகரில் எல்லா இடங்களிலும் உருவாக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே, சமுதாயத்தில் ஏழையெளிய மக்களுடைய முன்னேற்றம், அரசினுடைய முக்கிய நோக்கமாகவும், கருத்தாகவும் இருக்கிறது. அந்த அடிப்படையிலே, ஆதி திராவிடர், மலைவாழ் மக்களுக்காக மேம்படுத்தப்பட்ட வீட்டுமனைகள் மற்றும் வீடுகள் ஒதுக்கீடுகள் 18 சதவீதம் இருக்கிறது. அதேபோல், பொது மக்களுக்கு 37 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் மற்றும் முடிதிருத்துவோர் சமூகத்தினருக்கு 5 விழுக்காடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், இராணுவத்தினர், முன்னாள் இராணுவத்தினர், இராணுவத்தினரின் விதவைகள் போன்றவர்களுக்கு $7\frac{1}{2}$ விழுக்காடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசுப் பணியாளர்களுக்கும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியப் பணியாளர்களுக்கும் $18\frac{1}{2}$ சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிற சமயத்தில், ஏற்கெனவே பொது மக்களுக்கான ஒதுக்கீடு மிகவும் குறைந்த அளவாக இருக்கிற காரணத்தினால், வழக்கறிஞர்களும் அப்படிப்பட்ட பிரிவுகளில் பங்கு பெற்று பயனடையலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 451, திரு. எஸ். எஸ். ராமசுப்பு மற்றும் திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

451—

ஊனமுற்றவர்கள், விதவைகள், முதியோர்களுக்கு சலுகைகள் வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்த்தல்.

*1144 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :
திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊனமுற்றவர்கள், விதவைகள், முதியோர்களுக்கு அரசு சலுகைகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,